பெரிய பெரிய ஞானிகள் எல்லாம் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறார்கள். கனம் ராஜாஜி அவர்கள் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறார். டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறார். மாண்புமிகு அம்மையார் அவர்களும் கீழ்ப்பாக்கத்தில்தான் இருக்கிறார். எவ்வளவோ பெரியவர்கள் எவ்வளவோ நல்லவர்கள் எல்லாம் கீழ்ப்பாக்கத்தில் இருந்திருக்கிறார்கள். இருந்து வருகிறார்கள். கீழ்ப்பாக்கம் என்பது ஒரு 'குறிசசொல்லாக' ஆகிவிடக்கூடாது. உறுப்பினர் யாரும் அப்படிப் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பேசும்போது, சட்டமன்றத்தில் கீழ்ப்பாக்கத்தைப் பற்றி இவ்வாறு ஏளனமாகப் பேசுகிறார்களே என்று வெளியிலே பொதுமக்கள் தவறாக எண்ணிவிடக் கூடாது. ஆகவே, கீழ்ப்பாக்கத்தில் அக்கறையுள்ளவர்கள் யாரும் தவறான கருத்து வருவதாக கருதிக் கொள்ளத் தேவையில்லை.

பழனி மலையிலுள்ள இழுவை ரயில்

*887 வினா : திரு இரா. மாணிக்கவாசகம் : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) பழனி மலையில் தற்பொழுது உள்ள இழுவை ரயில் போல மற்றொன்று அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, நேற்றைய செய்தித் தாளில் சட்டப் பேரவைத் தலைவர், "இனிமேல் நடக்கக்கூடிய சட்டமன்ற நிகழ்ச்சிகள் மாலை நேரத்தில் நடக்கும்" என்று சொன்னதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பழனிமலையைப் பற்றிய கேள்வி. இன்னும் கேள்வி நேரம் முடியவில்லை.

திரு கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பழனிமலையில் இப்போதுள்ள இழுவை ரயில் மூலமாக பக்தர்கள் போவதற்கு அதிக நேரம் ஆகிறது சுமார் 4 அல்லது 5 மணி நேரம் காத்திருக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, இன்னொரு இழுவை ரயில் பாதை போட்டு, பக்தர்களுக்கு அதிக வசதியை அரசு ஏற்படுத்தித் தருமா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இன்னொரு ரயில் பாதை அமைக்க வேண்டுமென்கிற யோசனை அறங்காவலர் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அறங்காவலர் குழு இதுபற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை. அந்தக் குழு முடிவு எடுத்த பின்னர் தான் இது பற்றி யோசிக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இந்த இழுவை ரயில் பாதை அமைக்க எவ்வளவு பணம் செலவாகும் ? இதைச் செய்வதில் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ? இந்த ரயில் பாதையை அமைப்பதற்குப் போதுமான பணம் இல்லையா ? அல்லது மனம்தான் இல்லையா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற இழுவை ரயில் அமைப்பதற்காக 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறோம். பக்தர்களுக்குத் தேவையான வசதி செய்து தரப்பட்டுள்ளது. இன்னொரு ரயில் பாதை அமைக்கத் தேவையான பண வசதி இருக்கிறது. இதைப்பற்றி அறங்காவலர் குழு முடிவு செய்தால்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். இழுவை ரயிலில் மேலே சென்று, கீழே வருவதற்காக 2 ரூபாய் கட்டணம் வாங்குகிறார்கள். மேலே செல்வதற்கு மட்டும் அல்லது கீழே வருவதற்கு மட்டும் தனியாக 1¼ ரூபாய் கட்டணம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளிக்குறியிடாத வினாக்கள்.

Assessees under Urban Land Tax Act

1—Q.— Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) the total number of assessees of Urban Land Tax in the State, districtwise.

(*b*) the total amount collected so far by way of Urban Land Tax ; and

(c) the amount to be collected as on date ?

A.—

(*a*) The Tamil Nadu Urban Land Tax Act, 1966 is in force from 1st July 1963 in the City of Madras. It has been extended to Madurai City and the Municipal towns of Coimbatore, Salem and Tiruchirappalli only during 1971 and the preliminary work of enumeration is in progress in these areas. Information about the number of assessees is therefore available only in respect of Madras City. The number of assessees in Madras City is 1,28,858. This number will go down in view of the exemption granted to persons owning an extent of one ground and below by the Tamil Nadu Urban Land Tax Amendment Act, 1971 which comes into effect from the current Fasli, i.e., Fasli 1381. The actual number of assessees as a result of this exemption is not yet available as the time for submission of returns under the amended Act has been extended up to 29th February 1972.

(*b*) Rs. 3,10,92,980 as on 15th January 1972 in Madras City.

(c) Rs. 2,99,59,085 as on 15th January 1972 in Madras City.

(அ) சென்னை மாநகரில் 1966-ம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 1-ம் நாள் முதல் தமிழ்நாடு நகர்புற நிலவரிச் சட்டம் செயலில் உள்ளது. 1971-ம் ஆண்டு, மதுரை மாநகருக்கும், கோயம்புத்தூர் சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சி நகரங்களுக்கும் மட்டும் அச் சட்டம் அண்மையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இப் பகுதிகளில் கணக்கெடுப்பதற்கான தொடக்கப் பணிகள் நடந்து வருகின்றது.